கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), காஞ்சிபுரம் (பக்கம் )

**O.S. No.:- 215/2010**

**-----**

**2019**ம் ஆண்டு டிசம்பர் திங்கள் **04**ம் நாள் **Dw.2**

என்பவரின் சாட்சியாகிய **Tmt.Vasanthapriya** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் படி )திரு**. Mohanraj,Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - **Tmt.Vasanthapriya** | விலாசம் | - |
| த/பெ | - | திரு**.** | |
| வயது | - | | |
| மதம் | - | | |
| தொழில் | - | கைபேசி எண் **-** | |

5முதல் 7வரை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2சாட்சியின் குறுக்கு விசாரணை=

3வது பிரதிவாதியான எனக்கு இந்த வழக்கை பற்றி நன்றாக தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். நானும், மற்றும் 2மற்றும் 4பிரதிவாதிகள், இந்த வழக்கில் உள்ள வாதிகளும் மற்ற பிரதிவாதிகளும் போடப்பட்ட எல்லா சமர்ப்பிப்புகளும், ஆவணங்களும் நன்றாக தெரியும் ஆகையால் தான் சாட்சியாக நான் மற்றும் என் தாயார் மற்றும் சகோதரியின் அனுமதியின் பேரில் தான் வந்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு இதற்கு முன்னால் ஆஜராகிய வழக்கறிஞர் பெயர் திரு.இராஜசேகர் என்றால் சரிதான். திரு.சுகப்பிரியன் என்ற வழக்கறிஞர் துணை வழக்கறிஞர் என்றால் சரிதான். வாதியும் நாங்களும் ஒன்றாக தான் இருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். என் தாயார், தங்கை மற்றும் என் பிறந்த தேதி என்ன என்றால் தாயார் 19/11/1966, என் பிறந்த தேதி 23/11/1980, என் தங்கை பிறந்த தேதி 03/07/1982 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விலாசத்தில் தான் நானும், என் தாயாரும் வசிக்கிறோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி விலாசமானது புது பெருங்குளத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் என்றால் சரிதான். என் சகோதரி வேறொரு வீட்டில் தான் வசிக்கிறார் என்றால் சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகள் புது பெருங்குளத்தூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வீட்டில் வசிக்கிறோம் என்று சொன்னால் சுமார் 35 வருடங்கள் இருக்கும், என் அப்பா இறந்ததிலிருந்து அங்கு வசிக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலம் எல்லாம் நான் கூறி படித்து பார்த்து மற்றும் 2 மற்றும் 4பிரதிவாதிகளுடன் கலந்து என் கையொப்பம் இட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்கு முன் வாதிகள் வக்கீல் நோட்டீஸ் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகளும், அவர் குடும்பத்தாரும், எங்களை நேரில் வந்து இது போல்

பாகப்பிரிவினை கேட்டு இருக்கிறோம், எங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறியதால் வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2013ம் ஆண்டு தான் எதிர்வழக்குரை சமர்ப்பித்தோம் என்று சொன்னால் சரிதான். தோராயமாக வழக்கு தொடர்ந்து 5ஆண்டுகளுக்கு பிறகு தான் எங்கள் எதிர்வழக்குரை சமர்ப்பித்தோம் என்று சொன்னால் இல்லை மூன்று ஆண்டுகள் தான் ஆகிறது. என் தாய் தந்தையின் திருமணம் நாள் என்ன என்றால் 1979ம் வருடம் நவம்பர் மாதம் ஆகும். தேதி ஞாபகம் இல்லை. தாவா 1ஆன சொத்தில் நானும், என் தந்தையும், பிரதிவாதிகள் 2மற்றும் 4ம் வசித்து வந்த வீடு என்று சொன்னாலும், அதன்பிறகு தற்போது 6ம் பிரதிவாதி இன்று வரை வசித்து வரும் வீடு என்று சொன்னால் சரிதான், மேற்படி வீட்டில் 1985ல் என் அப்பா இறக்கும் வரை அங்கு இருந்தோம். அதற்கு பிறகு எங்கள் பாட்டி வீட்டிற்கு சென்று விட்டோம். தாவா 1ஐயிட்டம் சொத்தில் இருந்த காலத்தில் யார் வீட்டில் சாப்பிடுவோம் நாங்கள் தனி போஜனில் இருந்து சாப்பிட்டோம். 5முதல் 7வரை உள்ள பிரதிவாதிகளும் தனி போஜனாக இருந்து தான் அனுபவித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 12ம்வகுப்பு படித்திருக்கிறேன். நிலம் (ரியல் எஸ்டேட்) சம்பந்தமாகவோ அல்லது லேண்ட் அன்டு அட்மினிரேசன் சம்பந்தமாகவோ படித்திருக்கிறேனா அல்லது அனுபவம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் 4வது பாராவில் அனுப்பம்பட்டு சொத்தை 1வது பிரதிவாதி, அவர் அம்மா, என் பாட்டிக்கு தெரியாமல் விற்று விட்டார் என்று நான் கூறியுள்ளது சரியா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.44 ஆவணத்தில் உள்ள சொத்தை என் பாட்டி 6ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்டு எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தை என் பாட்டியார் அடமானம் வைத்ததின் பேரில் 6ம்பிரதிவாதியின் தந்தை (1ம் பிரதிவாதி) தான் மீட்டுள்ளார் என்றாலும், அதனால் தான் 6ம் பிரதிவாதியின் தந்தையான 1ம் பிரதிவாதியின் பெயருக்கு என் பாட்டியார் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அனுப்பப்பட்டு கிராமத்தில் உள்ள சொத்தை விற்ற விவரம் தான் தெரியும் மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. வாதி என் அத்தை என்பதால் என் அத்தையின் உறவினர்களை நன்கு அறிவேன் என்று சொன்னால் சரிதான். 1ம் வாதியின் மகன்கள் ஜின்னு, ரமேஷ் என்றால் சரிதான். 2ம் வாதியின் கணவர் ஜனார்தனன், மகள் விஜி, பேத்தி சிந்துஜா என்றால் சரிதான். 3ம் வாதியின் கணவர் சீனிவாசன், மகள் கீதா, மகன் மகேஷ் என்றால் சரிதான். 2மற்றும் 3வாதியின் மாமனார் கோபால்நாயுடு என்றால் சரிதான். 2மற்றும் 3வாதியின் மாமனார் கோபால்நாயுடு பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டுள்ளார் என்று சொன்னால் அதை

பற்றி தெரியாது. 2மற்றும் 3வாதியின் மாமனார் கோபால்நாயுடுவின் மகன்கள் ஜனார்தனன், சீனிவாசன், டெல்லிபாட்ஷா, கோவர்த்தனன், பாஸ்கரன் மற்றும் மகள்கள் மீராபாய், கௌசல்யா என்றால் சரிதான்.

**(5முதல் 7வரை பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**